Nations Trust Bank
Private Banking

**அன்பார்ந்த பிரைவட் பேங்கிங் வாடிக்கையாளர்களுக்கு,**

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் கீழ் வருகின்ற தேவைப்படுத்தலொன்றினை அனுசரித்து உங்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான வங்கியியல் உற்பத்திகளை / சேவைகளை தெரிவுசெய்வதற்காக உங்களுக்கு உதவுவதற்கு முனைகின்ற முக்கிய விடய ஆவணங்களைக் கொண்ட தொகுதியொன்றினை நாம் தயாரித்துள்ளோம்.

இம் முக்கிய விடய ஆவணமானது நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் தனிப்பட்ட வங்கிச் சேவைகளுக்காக கிடைக்கப்பெறுகின்ற நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிரைவட் பேங்கிங் முன்மொழிவு பற்றிய பரந்த விளக்கவுரையைத் தருகின்றது.

எனினும், சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களுக்கும் வங்கியின் கொள்கைகளில் அத்துடன் நடைமுறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் அமைவாக கீழே முக்கிய விடய ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் திருத்தத்தினை வேண்டலாம் என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

நீங்கள் மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்வதற்கு விரும்புவீர்களாயின் பின்வரும் வழிகள் ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள் www.nationstrust.com அல்லது +94(0)114626262 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக 24 மணி நேர அழைப்பு நிலையம்.

கீழே தரப்பட்டுள்ள எவையேனும் உங்கள் கணக்குகள் தொடர்பில் உங்களிடம் ஏதேனும் முறைப்பாடு இருக்குமெனில் தயவுசெய்து முறைப்பாட்டு அறிவித்தலை உள்ளடக்குகின்ற எழுத்திலான சுருக்கமான அறிக்கையொன்றினை **முறைப்பாடுகள் தீர்மான அலுவலர், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு – 02** என்ற முகவரிக்கு அனுப்புங்கள் அல்லது தொலைபேசி வாயிலாக [**+94(0)11 4711411**]/[**customerservice@nationstrust.com**] என்ற மின்னஞ்சல் ஊடாக எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள், உங்களுக்கு நாம் விரைவாக பதிலளிப்போம்.

| கணக்கு பற்றிய விபரம் | வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள் | கட்டணங்கள் மற்றும் வேறு வங்கி அறவீட்டு வகைகள் | கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கிய நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| **நடைமுறைக் கணக்குகள்** | | | | |
| **பிரைவட் பேங்கிங் உறுப்புரிமை**<br>இது, இவ் ஆவணத்தில் எடுத்துரைக்கப்பட்டவாறு பிரத்தியேகமான வங்கிச்சேவை, முதலீடுகள் மற்றும் வேறு பல நிதியியல் சிறப்புரிமைகள் என்பனவற்றை ஒன்றிணைக்கின்ற உயர்ந்தளவில் தனிபட்டதேவைக்கேற்ற விதத்திலான சேவை மற்றும் விழுமியங்களுடன் கூடிய தொடர்புப் பொதியொன்றாகும். | • ஆதனத் திட்டமில் சேவைகள்[1]<br>• ஓவிய ஆலோசனைச் சேவைகள்[2]<br>• சொகுசுப் படகு மற்றும் தனிப்பட்ட நீர்க் கலங்களுக்கான நுழைவு மற்றும் உறுப்புரிமை[3]<br>• பயண வரவேற்பு சிறப்புரிமை[4]<br>• விமான நிலையத்தில் இலவச விசேட அதிதி நுழைவு (Palm Strip Lounge)[5]<br>• சொத்துப் பங்குடமைச் சேவை[6]<br>• நேஷன்ஸ் ட்ரஸ்ட் பிரைவட் பேங்கிங் ஜூனியர் பிரிவு மற்றும் எதிர்கால தலைவர் நிகழ்ச்சித்திட்டம்<br>• கொடையாண்மை முகாமைத்துவ கணக்குச் சேவை<br>• வைப்புகளுக்கு, கடன்களுக்கு/ மேலதிகப் பற்றுகளுக்கு | • வேண்டப்பட்ட சொத்துப்பட்டியல் மீதி பேணப்படாதவிடத்து ரூ. 2500 கொண்ட மாதாந்த சேவைக் கட்டணம் அறவிடப்படும்.<br>• ரூபாய் நடைமுறை மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்காக வேண்டப்பட்ட மாதாந்த சராசரி மீதி பேணப்படவில்லையாயின் , குறைந்தபட்ச மீதிக்கான சேவைக் கட்டணம் அறவிடப்படும்.<br>• முற்போர்ந்த நிரையில் "நன்மைகள்" இன் கீழ் விவரிக்கப்பட்ட வதிவிலக்குகளுக்குட்பட்டு வங்கியின் வழமையான கட்டணங்களும் அறவீடுகளும் ஏற்படையதாகும்.<br>• | • உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட பிரைவட் பேங்கிங் கணக்கு ஆரம்பிக்கும் படிவம்.<br>• தேசிய அடையாள அட்டையின் பிரதி/செல்லுபடியான கடவுச் சீட்டுப் பிரதி<br>• வதிவிட முகவரி, தேசிய அடையாள அட்டையில் அல்லது கடவுச் சீட்டில் இருந்து வேறுபடுமாயின் முகவரியினை உறுதிப்படுத்துவதற்கு ஆவண ரீதியான சான்று அவசியமாகும்.<br>• பிரைவட் பேங்கிங் உறுப்புரிமை ஏற்றுக்கொள்ளல் படிவம். மற்றும் வங்கியினால் | இன்வெஸட்மென்ட் பிளான்னர் நீங்கலாக ரூபா நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கில் குறைந்தது ரூ. 10,000 கொண்ட மாதாந்த சராசரி<br><br>அத்துடன்<br>சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இரண்டிலும் ரூ. 20 மில்லியன் கொண்ட மொத்தத் தொடர்பு.<br><br>அல்லது<br><br>ரூ. 10 மில்லியன் கொண்ட மொத்த தொடர்பு.<br><br>நேசன்ஸ் சலரி சேவர், சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கிற்கு மாதாந்தம் ரூ. 500,000 கொண்ட தேறிய சம்பள அனுப்புகை *(பிரைவட் பேங்கிங் குளோபல் வாடிக்கையாளர்களுக்கு/வதியாதோருக் ஏற்புடையதாகாது).*<br><br>நிதிச்சொத்து பட்டியல் மீதியானது 6 மாதங்களுக்கு தகைமைப் பிரமாணத்தை நிறைவுசெய்யாத போது, அனைத்து விசேட சலுகைகளும் வங்கியின் தற்றுணிபில் மீளப்பெறப்பட்டு, வாடிக்கையாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | (பிணையளிக்கப்பட்ட) முன்னுரிமை வட்டி வீதங்கள்<br>• வர்த்தக நாமம் பொறிக்கப்பட்ட இலவச காசோலை<br>• இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட வேறு வங்கி ATM களில் பண மீளெடுப்புகள் மற்றும் மீதி விசாரணைகள் இலவசம்<br>• உயர்ந்தளவான நாளாந் பண மீளெடுப்பு வரையறைகள்<br>• வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல், கொள்வனவுகள், கொடுப்பனவுக் கட்டளை வழங்குதல்/ பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்கள் மீது விசேட கட்டணங்கள்.<br>• முன்கூட்டியே அனுமதிக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன் அமெரிகன் எக்ஸ்பிரஸ் அட்டை அல்லது அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கோல்ட் அட்டை பெற்றுக்கொள்வதற்கான தெரிவு.<br>பிரைவட் பேங்கிங் குளொபல் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கப்பெறும் நன்மைகள்<br>• உலகளாவிய மற்றும் உள்நாட்டு | | கருதப்படுகின்றவாறான வேறு தேவையான ஆவணங்கள். | வகைப்படுத்தல், விடயத்திற்கு ஏற்றவாறு இன்னர்சேர்கிள் உறுப்புரிமையாக அல்லது கிரமமான//சாதாரண வாடிக்கையாளராக மாற்றம்செய்யப்படும்.<br><br>நடைமுறைக் கணக்கொன்றை அல்லது சேமிப்புக் கணக்கொண்றை பேணுவது கட்டாயமாகும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மருத்துவக் கவனிப்பு உதவி[7]<br>• சாரதியுடன் அல்லது சுயமாகச் செலுத்துகின்ற வாடகை வாகனச் சேவை[8] | | | |

**ஏற்புடைய நியதிகள்**

01- ‘ஆதனம் திட்டமில் சேவைகள்’ வெளிவாரி தொழில்சார் சட்ட ஆலோசனை நிறுவனமொன்றினூடாக வழங்கப்படும். அத்தகைய சேவைகளை வழங்குநராக வங்கி இருக்காது என்பதுடன் தொழில்சார் சட்ட ஆலோசனை நிறுவனத்திற்கு/ சேவை வழங்குநருக்கு வாடிக்கையாளரை அறிமுகப்படுத்துகின்ற வெறுமனே வசதிப்படுத்துநராகவே வங்கி இருக்கும். எனவே, இச் சேவையின் கீழ் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் ஆலோசனைக்காக அல்லது உதவிக்காக வங்கி ஏதேனும் பொறுப்பினை அல்லது கடமையினை ஏற்காது என்பதனை வாடிக்கயைாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

02- ‘ஓவிய ஆலோசனைச் சேவைகள்’ வெளிவாரி ஓவிய ஆலோசனை நிறுவனமொன்றினூடாக வழங்கப்படும். அத்தகைய சேவைகளை வழங்குநராக வங்கி இருக்காது என்பதுடன் தொழில்சார் ஓவிய ஆலோசனை நிறுவனத்திற்கு/ சேவை வழங்குநருக்கு வாடிக்கையாளரை அறிமுகப்படுத்துகின்ற வெறுமனே வசதிப்படுத்துநராகவே வங்கி இருக்கும். எனவே, இச் சேவையின் கீழ் வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் ஆலோசனைக்காக அல்லது உதவிக்காக வங்கி ஏதேனும் பொறுப்பினை அல்லது கடமையினை ஏற்காது என்பதனை வாடிக்கயைாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

03- சொகுசுப் படகு மற்றும் தனிப்பட்ட நீர்க் கலங்களுக்கான நுழைவு மற்றும் உறுப்புரிமை- வெளிவாரி கம்பனியொன்றினால் வழங்கப்படும். அத்தகைய சேவைகளின் வழங்குநராக வங்கி இருக்காது என்பதுடன் அந்த சேவைக்கு வாடிக்கையாளரை அறிமுகப்படுத்துகின்ற வெறுமனே வசதிப்படுத்துநராகவே வங்கி இருக்கும் எனவே அது தொடர்பிலான ஏதேனும் பொறுப்பினை ஏற்காது. இவ் அம்சத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகள், வருடாந்தம் மீளாய்வுசெய்யப்படும் என்பதனை வாடிக்கயைாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

04- பயண வரவேற்பு சிறப்புரிமை சேவைகள் வெளிவாரி கம்பனியொன்றினால் வழங்கப்படும். அத்தகைய சேவைகளின் வழங்குநராக வங்கி இருக்காது என்பதுடன் அது தொடர்பிலான ஏதேனும் பொறுப்பினை ஏற்காது. இவ் அம்சத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகள், வருடாந்தம் மீளாய்வுசெய்யப்படும்.

05- இலங்கை, கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ‘இலவச விமானநிலைய அதிதி நுழைவு (Palm Strip Lounge)’ இன் கீழ் வழங்கப்படும். சேவைகளின் வழங்குநராக வங்கி இருக்காது. வெறுமனே அந்த சேவைக்கு வாடிக்கையாளரை அறிமுகப்படுத்துகின்ற வசதிப்படுத்துநராகவே இருக்கும். அது தொடர்பிலான ஏதேனும் பொறுப்பினை வங்கி ஏற்காது. இவ் அம்சத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகள், வருடாந்தம் மீளாய்வுசெய்யப்படும் என்பதனை வாடிக்கயைாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

06- வங்கியினால் வழங்கப்படும் சொத்துப் பங்குடமைச் சேவையின் கீழ் தற்கால மற்றும் எதிர்கால நிதியியல் தேவைகளுக்காக எவ்வாறு தயாராவது பற்றிய பயிற்றப்பட்ட தொழில்சார் நிபுணரொருவரினால் வழங்கப்படுகின்ற தகவல்கள் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் முதலீட்டு நிதியியல் சொத்துப்பட்டியலை வாடிக்கையாளர் உருவாக்கின்றார். ஒட்டுமொத்த சொத்துப்பட்டியலினதும் சொத்து மதிப்பீடு அதேபோன்று தனிப்பட்ட முதலீடுகளைத் தெரிவுசெய்தல் என்பன வாடிக்கையாளரின் ஏக தற்றுணிபின் பேரில் மேற்கொள்ளப்படும்.

**07-** ‘உலகளாவிய மற்றும் உள்நாட்டு மருத்துக் கவனிப்பு உதவி’ வெளிவாரி விசேடத்துவமிக்க நிறுவனமொன்றினால் வழங்கப்படும். சேவைகளின் வழங்குநராக வங்கி இருக்காது. வெறுமனே அந்த சேவைக்கு வாடிக்கையாளரை அறிமுகப்படுத்துகின்ற வசதிப்படுத்துநராகவே இருக்கும். அது தொடர்பிலான ஏதேனும் பொறுப்பினை வங்கி ஏற்காது. இவ் அம்சத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகள், வருடாந்தம் மீளாய்வுசெய்யப்படும் என்பதனை வாடிக்கயைாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

08- சாரதியுடன் அல்லது சுயமாகச் செலுத்துகின்ற வாடகை வாகனச் சேவைகள் வெளிவாரி விசேடத்துவமிக்க நிறுவனமொன்றினால் வழங்கப்படும். சேவைகளின் வழங்குநராக வங்கி இருக்காது. வெறுமனே அந்த சேவைக்கு வாடிக்கையாளரை அறிமுகப்படுத்துகின்ற வசதிப்படுத்துநராகவே இருக்கும். அது தொடர்பிலான ஏதேனும் பொறுப்பினை வங்கி ஏற்காது. இவ் அம்சத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நன்மைகள், வருடாந்தம் மீளாய்வுசெய்யப்படும் என்பதனை வாடிக்கயைாளர் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, இலங்கை மத்திய வங்கினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றாகும். பல வகையினைக் கொண்ட வாடிக்கையாளர் வகுப்பினருக்கு பல வகையான சேவைகளையும் உற்பத்திகளையும் திறம்பட வழங்குகின்ற பிஸினஸ் டுடே சஞ்சிகைனை மூலம் தரப்படுத்தப்பட்டவாறு இலங்கையிலுள்ள முதல் 30 தொழில் நிறுவனங்களில் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி இடம்பெறுகின்றது. இலங்கையின் முதல் டிஜிடல் வங்கியான FriMi ஐ உருவாக்கிய வங்கியாகவும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி திகழ்கின்றது. வங்கி, நாடுபூராகவும் 96 கிளைகளை தொழிற்படுத்தி 135 அமைவிடங்களில் ATM வலையமைப்பையும் 46 பண வைப்பு மற்றும் பண மீளெடுப்பு இயந்திரங்களுடன் சேர்த்து லங்கா பே வலையமைப்பின் 3,500 இற்கும் மேற்பட்ட ATM களையும் கொண்டு பெருமையடைவதுடன் இலங்கையில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டைகளின் வழங்குநரும் ஏக ஏற்பவருமாகும்.

பதிப்பு 2021 மார்ச் 15